# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண்கள். **108,109,110 &111 /ந/2018**

ஆணை எண். **128/2018**

நாள் : **24/05/2018**

திரு எஸ். என். நாச்சிமுத்து,
கோயம்புத்தூர்.

– **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையாளர்,
திருச்செங்கோடு, மேட்டுப்பாளையம்,
பழனி மற்றும் விழுப்புரம்.

– **எதிர் மனுதாரர்கள்**

கோயம்புத்தூர் மாவட்டம், விமான நிலைய அஞ்சல், கதவு எண்.18.1, அசோக் லேஅவுட் முகவரியில் வசிக்கும் திரு S.N. நாச்சிமுத்து அவர்களின் 21.05.2018 நாளிட்ட நான்கு முறையீட்டு மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் 23.05.2018 அன்று பெறப்பட்டு, **108,109,110 &111 /2018** எண்களிட்ட முறையீட்டு மனுக்களாகப் பதிவு செய்யப்பட்டன. முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், விமான நிலைய அஞ்சல், கதவு எண்.18.1, அசோக் லே-அவுட் முகவரியில் வசிக்கும் திரு S.N. நாச்சிமுத்து என்பவர், கீழ்க்காணும் நகராட்சிகளில் நகரமைப்பு திட்ட ஆய்வாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ளார் :-

| வ. எண். | நகராட்சிகளின் பெயர் | பணியின் தன்மை | பணியாற்றிய காலம் |
|---|---|---|---|
| 1. | திருச்செங்கோடு நகராட்சி | நகரமைப்பு திட்ட ஆய்வாளர் | 07.06.2003 – 16.11.2004 |
| 2. | மேட்டுப்பாளையம் | நகரமைப்பு திட்ட ஆய்வாளர் | 17.11.2004 – 31.07.2007 |
| 3. | பழனி நகராட்சி | நகரமைப்பு திட்ட ஆய்வாளர் | 01.08.2007 – 11.11.2009 |
| 4. | விழுப்புரம் நகராட்சி | நகரமைப்பு திட்ட ஆய்வாளர் | 12.11.2009 – 31.03.2011 |

மேற்குறிப்பிட்ட நகராட்சிகளில் பணியாற்றிய காலங்களில் தனது ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதிக்கான வட்டித் தொகையினை வழங்கக் கோரி சம்பந்தப்பட்ட நகராட்சிகளுக்கு முறையீடு செய்தும் இதுநாள் வரையிலும் வட்டித் தொகை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. நகராட்சி நிர்வாக ஆணையர் தனது 29.02.2008 நாளிட்ட சுற்றறிக்கை எண்.9019/எல்3/2008 மற்றும் 10.04.2008 நாளிட்ட சுற்றறிக்கை எண்.16729/எல்3/2008–இல், ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர்களுக்கு, பணியின் போது பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதிக்கான வட்டித் தொகையினை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைக் குறித்த வழிகாட்டுதல்களை அறிவிக்கை செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைகளில், 10.04.2008 நாளிட்ட சுற்றறிக்கையில், மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள் தங்கள் மண்டலத்திற்குட்பட்ட நகராட்சிகளில் சேமநலநிதி நிலுவைத் தொகை மற்றும் வட்டித் தொகைகள் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு வழங்கப் பட்டதா என்பதை மாதாந்திர கூட்டத்தில் கண்காணிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நிலுவைத் தொகை மற்றும் வட்டித் தொகை வழங்குவதில் காலதாமதம் ஏற்படின் அதற்கான முழுப்பொறுப்பும் சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையரையே சேரும் என்றும், எனவே, அனைத்து நகராட்சி ஆணையாளர்களும் சேமநலநிதி நிலுவை வழங்குவதில் கால தாமதத்தை தவிர்க்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

3. எனவே, முறையீட்டு மனுதாரிடமிருந்து பெறப்பட்ட அல்லது பெறப்படும் சேமநலநிதி / பிற இனங்கள் சம்பந்தப்பட்ட நிலுவைத் தொகைகளை வழங்கக் கோரும் மனுக்களை மேலே பத்தி 1–இல் குறிப்பிடப்பட்டுள்ள பணி விவரங்களை சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்கள் உறுதி செய்து கொள்வதுடன் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரின் ஒப்புதலையும் பெற்று முறையீட்டு மனுதாருக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகையினை வழங்குவதற்கான நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ளும்படி சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்களுக்கு இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது. இந்நேர்வு சம்பந்தமாக நகராட்சி ஆணையாளர்கள் மேற்கொண்ட / மேற்கொள்ளும் நடவடிக்கைகளை விரைந்து முடிப்பதற்கு உரிய அறிவுரைகளை வழங்கவும் சம்பந்தப்பட்ட மண்டல நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, மே திங்கள், 24–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/ [signature] 24/5/18

செயலாளர்

[initials] 25/5/18

[initials] 24/5/18

பெறுநர்

1. நகராட்சி ஆணையாளர்,
திருச்செங்கோடு நகராட்சி,
நாமக்கல் மாவட்டம்,

2. நகராட்சி ஆணையாளர்,
   மேட்டுப்பாளையம் நகராட்சி,
   கோயம்புத்தூர் மாவட்டம்.

3. நகராட்சி ஆணையாளர்,
   பழனி நகராட்சி,
   திண்டுக்கல் மாவட்டம்.

4. நகராட்சி ஆணையாளர்,
   விழுப்புரம் நகராட்சி,
   விழுப்புரம் மாவட்டம்.

5. திரு S.N. நாச்சிமுத்து,
   கதவு எண்.18.1, அசோக் லே அவுட்,
   விமான நிலைய அஞ்சல்,
   கோயம்புத்தூர் – 641 014

6. நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர்,
   நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநரகம்,
   சேலம்.

7. நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர்,
   நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநரகம்,
   திருப்பூர்.

8. நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர்,
   நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநரகம்,
   மதுரை.

9. நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர்,
   நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநரகம்,
   விழுப்புரம்.

10. நகராட்சி நிர்வாக ஆணையர்,
    நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
    சேப்பாக்கம், சென்னை – 600 005.

நகல் : சட்டமன்ற உறுப்பினர் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி